<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் புதன்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.6/2025 இன் அசல் வழக்கு எண்.99/2022</u>**

செந்தில்வடிவு

... மனுதாரர்/
வாதி

/எதிராக/

1. அருட்செல்வி (இறந்துவிட்டார்)
2. அன்புசெல்வி
3. சாந்தி
4. அருள்மணி (எ) அருள்மொழி

.... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக என் முன்பு கடந்த 05.02.2026 -ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. தனசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி உ.வி.மு.ச கட்டளை 6 விதி 17-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>

2.மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த பாக வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1 வது பிரதிவாதி எவ்வித ஆதரவும் எழுதி வைக்காமல் தனது மகள்களான 2 முதல் 4 பிரதிவாதிகளையும் மருமகளான மனுதாரரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு 11.05.2025 -ம் தேதி இறந்துவிட்டார். இறந்துபோன 1 வது பிரதிவாதியின் வாரிசுகள் இவ்வழக்கில் தரப்பாளர்களாக உள்ளதால் 1-ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு அற்றுப்போய்விடவில்லை. இறந்துபோன 1 வது எதிர்வாதிக்கு வேறு வாரிசுகள் இல்லை. இருப்பினும் வழக்குரையில் 1-ம் பிரதிவாதி இறப்பை பொறுத்து பதிவு செய்ய வேண்டியுள்ளதால் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் 1-ம் பிரதிவாதியின் இறப்பின் காரணமாக அவரது பங்கினை மனுதாரரும் 2 முதல் 4 பிரதிவாதிகளும் வாரிசு கிரமத்தில் அடைந்துள்ளார்கள். இதனை அனுசரித்து வழக்குரை ஆ பரிகாரமான பாகபரிகாரத்திலும் பக வீதத்தை பொறுத்து திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, இவைகளை பொறுத்து வழக்குரைகளை திருத்தம் செய்ய அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3,4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>**

(3.1)மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு பொய்யும் மோசடியுமாகும். மனுப்படி மனுதாரருக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல மனுவில் எவ்வித உண்மையுமில்லை. வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கிடைச்சொத்தின் வாரிசுகளையும் கூடுதல் பாக சொத்தும் சேர்க்காமல் உள்ளது. இவ்வழக்கில் 2 முதல் 4 வரை உள்ள எதிர்மனுதாரர்களின் பாட்டனார் பெயர் மாரிமுத்து ஆகும். மாரிமுத்துவிற்கு மாரியாயி, பழனியாண்டி, முத்துசாமி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். மனுதாரரின் பிராதில் 5-ம் பாராவில் ஏற்கனவே தாவா சொத்துக்களில் பெரும்பாலான சொத்துக்கள் உறவுமுறை பட்டியலில் கண்ட மாரிமுத்து என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், சில சொத்துக்கள் மாரிமுத்துவால் பூர்வீக சொத்துக்களின் வருமானத்தை கொண்டு கிரையம் பெறப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாரிமுத்துவின் முழு சொத்து விவரத்தையும் வழக்குரையில் மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது.

(3.2)இந்த 2 முதல் 4 வரை உள்ள எதிர்மனுதாரர்களின் அத்தை மாரியாயி ஆவார். அவரது கணவர் அம்மாவாசை ஆவார். மாரியாயி - அம்மாவாசை தம்பதியினருக்கு பிறந்தவர்கள் முத்துசாமி, ஆண்டி, கமலம் ஆவார்கள்.

மாரியாயியும், அம்மாவாசையும் இறந்துவிட்டார்கள். மாரியாயியின் சட்டப்படியான வாரிசுகள் வழக்கில் சேர்க்கவேண்டிய நபர்களை சேர்க்கவில்லை. மாரியாயியின் வாரிசுகளான முத்துசாமிக்கு கமலம், திருமயில் மனைவி சூர்யா, திருமயில் -சூர்யா வாரிசுகள் மகாலட்சுமி, சங்கவி, கிருஷ்ணன் ஆகியோர்களும் திருமயிலுடன் பிறந்தவர்களான பழனிசாமி, சரவணன், மாரியாயி-அமாவாசையின் வாரிசுகளான கமலம், ஆண்டி, ஆகியோர்கள் மனுதாரர்/வாதியின் பாகப்பிரிவினை வழக்கில் 9 நபர்களை மாரியாயியின் வாரிசுகளை வழக்கில் விடுபட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(3.3)பழனியாண்டி மனைவி பூங்கோதை 28.03.1990 -ம் ஆண்டு பிச்சை, ராஜவேல், ராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவண எண்.343/1990-ல் உள்ள சொத்துக்களும், மேலும் சிறுநாவலூர் கிராமத்தில் பழனியாண்டிக்கு சொந்தமான 1727 சதுரடி உள்ள RCC கெட்டிமெத்தை வீடும் வழக்கில் சேர்க்காமல் இந்த மனுதாாரர்/வாதி பாக வழக்கு தாக்கல் செய்து விகிதாச்சாரம் பிரித்து காட்டியுள்ளது தவறாகும். வாதியின் கணவர் தமிழ்செல்வன் சேனப்பநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து இறந்துவிட்டதால் அவருக்கு சேர வேண்டிய குடும்ப சேமநல நிதி, ஓய்வூதியம், விடுமுறை சம்பள சேமிப்பு என சுமார் ரூ.30,00,000/- க்கு வாதியின் கணவரின் வாரிசுகளுக்கு இறப்பு பணபலன்களை மறைத்து மனுதாரர் மனுவில் உண்மை சங்கதிகளை கொண்டு வந்து பரிகாரம் தேட விரும்பாமல் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(3.4)உண்மைத்தன்மையை மறைத்தும், வாரிசுகளை சேர்க்காமலும் இந்த மனுதாரர்/வாதி தரப்பில் பாகத்தின் மதிப்பு பிரித்து மனு தாக்கல் செய்துள்ளது உண்மையல்ல. மேற்படி மனுவில் வழக்கில் சேர்க்காத சொத்துக்களின் மதிப்புகளையும், மனுதாரர்/வாதியின் கணவர் மூலம் கிடைக்கும் பணபலன்களையும் சேர்த்தால் இந்த வழக்கானது மாண்புமிகு நீதிமன்ற வரையறைக்குள் வராது என்பதற்காகவும், இந்த மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதற்காகவும், மனுதாரர் மேற்கண்ட உண்மை சங்கதிகளை மறைத்து இந்த மனுவை மாண்புமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் வம்சாவளிப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளதில் இறந்துபோன மாரியாயியின் வாரிசுகளை காட்டவில்லை. வழக்கிற்காக மனுதாரர்/வாதி தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்ததாக கூறியிருப்பது முற்றிலும் பொய்யாகும்.

4.இருதரப்பு மனுக்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**தீர்வு..**

(5.1)மனுதாரர்/வாதி அசல் வழக்கின் 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், 1-ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதால் 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதை வழக்கில் பதிவு செய்ய வேண்டுமென்றும், பாக விகிதாச்சாரங்கள் மாற்றம் செய்யப்படவேண்டுமென்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. வழக்குச்சொத்தின் வாரிசுகளையும் கூடுதல் பாக சொத்தும் சேர்க்காமல் உள்ளது. உண்மையை மறைத்தும் அனைத்து வாரிசுகளையும் சேர்க்காமலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.2)இருதரப்பும் கேட்கப்பட்டது. அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதி வழக்குரையை திருத்தம் செய்ய கோருகிறார். 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மனுதாரர் மனுவில் 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதை பதிவு செய்யவும், பாக விகிதாச்சாரத்தை வழக்குரையில் மாற்றியமைத்து வழக்குரையை திருத்தம் செய்ய கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எதிர்மனுதாரர் எதிருரையில் வழக்கில் சொத்துக்கள் சேர்க்காமல் விடுபட்டுள்ளது என்றும், மாரிமுத்துவின் வாரிசுகள் சேர்க்கப்படவேண்டுமென்றும், தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் இம்மனுவை தள்ளுபடி செய்ய போதுமான காரணங்கள் அல்ல. இறந்துபோன நபர்களின் விவரங்களை வழக்கில் சேர்க்க வேண்டியது வாதியின் கடமை ஆகும். அசல் வழக்கில் முறையான தரப்பினர்களை சேர்த்தும், பாக உரிமை உள்ள அனைத்து சொத்துக்களையும் சேர்த்து பாக வழக்கு தாக்கல் செய்யும் பட்சத்தில் அசல் வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கக்கூடியது. அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் இருந்தாலும் அனைத்து சொத்துக்களையும் சேர்க்காமல் இருந்தாலும் அசல் வழக்கு பகுதி பாகப்பிரிவினையாலும் அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும் பாதிப்படைய வாய்ப்புள்ளது. எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் தெரிவித்துள்ள சங்கதிகளை வாதுரையாக அசல் வழக்கில் தெரிவித்துக்கொள்ளலாம். மேலும் மாரியாயியின் வாரிசுகள் யாரும் சொத்துக்கள் கேட்டு நடவடிக்கை எடுத்ததாக கூறவில்லை. அவர்கள் யாரும் மனு தாக்கல் செய்யவில்லை. பாகப்பிரிவினை வழக்குகளில் வழக்கின் தன்மையை மாற்றாமல் தரப்பினர்களின் பாக உரிமையை மாற்றாமலும் சொத்துக்கள் சேர்ப்பதற்கு அல்லது நீக்குவதற்கு சொத்தின் நிலை குறித்து உண்மையான விவரம் தெரிவிப்பதற்கு வழக்கின் எந்த நிலையிலும்

திருத்தப்பாடு அனுமதிக்கப்படலாம். இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை மாறாது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் இல்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் தங்கள் எதிர்வாதத்தை அசல் வழக்கில் நிரூணம் செய்துகொள்ளலாம். எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள எதிர்வாதம் குறித்து ஏற்கனவே இ.நி.ம.எ.ண்.4/2024-ல் விவாதிக்கப்பட்டு அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இம்மனுவை அனுதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(Sd)/- C. Vijay karthik,
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.</u>** இல்லை.

(Sd)/- C. Vijay karthik,
சார்பு நீதிபதி,
துறையூர்.